ஊடக அறிக்கை
தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477423 +94 11 2346257
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

வெளியிடுபவர் வங்கி மேற்பார்வைத் திணைக்களம் மற்றும் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம்
திகதி 2023.03.07

**தற்போதைய பேரண்டப் பொருளாதார நிலைமைகளால் பாதிக்கப்பட்ட நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கும் தனிப்பட்டவர்களுக்குமான சலுகை வழிமுறைகள்**

கொவிட்-19 நோய்ப்பரவல் அத்துடன் அதனைத்தொடர்ந்து வந்த பேரண்டப் பொருளாதார அபிவிருத்திகள் மூலம் பாதிக்கப்பட்ட கடன் பெறுநர்களுக்கு உதவும் முகமாக இலங்கை மத்திய வங்கியினால் மேற்பார்வை செய்யப்படுகின்ற நிதியியல் நிறுவனங்களூடாக பலவகையான கடனை காலந்தாழ்த்தி செலுத்தும் வசதிகளையும் சலுகைத் திட்டங்களையும் இலங்கை மத்திய வங்கி நடைமுறைப்படுத்தியுள்ளது. பாதிக்கப்பட்ட கடன் பெறுநர்களுக்காக நீடிக்கப்பட்ட மீள்கொடுப்பனவுக் காலங்கள், சலுகை வட்டி வீதங்கள், தொழில்படு மூலதனக் கடன்கள், படுகடனை காலந்தாழ்த்திச் செலுத்தும் வசதி மற்றும் கொடுகடன் வசதிகளை மறுசீரமைத்தல்/ மீள அட்டவணைப்படுத்தல் போன்றவற்றை இத்திட்டங்கள் உள்ளடக்கியுள்ளன.

இச்சலுகைகள், சுற்றுலாத் துறை, ஆடை, பெருந்தோட்டம், தகவல் தொழில்நுட்பம், ஏற்பாட்டுச்சேவை வழங்குநர்கள், போக்குவரத்து, பாடசாலை வேன் சேவை வழங்குநர்கள், பார ஊர்திகள், சிறிய பொருள் போக்குவரத்து வாகனங்கள் மற்றும் பேருந்துக்கள் அத்துடன் தனியார் துறை ஊழியர்கள் உள்ளடங்கலாக பாதிக்கப்பட்ட துறைகளின் பல சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு பெருமளவில் உதவியளித்தன. கொவிட்-19 மூலம் பாதிக்கப்பட்ட வங்கித்தொழில் துறை மற்றும் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் துறை என்பவற்றின் கடன்பெறுநர்களுக்கு வழங்கப்பட்ட கடனை காலந்தாழ்த்திச் செலுத்தும் வசதியின் இறுதிக்கட்டம் முறையே, 2022.06.30 அன்றும் 2022.03.31 அன்றும் முடிவுற்றது.

நிதியியல் முறைமை மீதான ஏதேனும் மிகையான அழுத்தத்தினை தடுக்கும்பொருட்டு, நிலைபேறான வழியில் கடனைக் காலந்தாழ்த்திச் செலுத்தும் வசதியினை முடிவுறுத்துவதற்கான தேவையினை பரிசீலனையிற்கொண்டு, கடன்பெறுநர்களது புதிய மீளச்செலுத்தும் இயலளவின் அடிப்படையில் பொருத்தமான மீளச்செலுத்தல் ஏற்பாடுகள் மீது அத்தகைய கடன்பெறுநர்கள் இணங்குவதை இயலச்செய்வதற்கு உரிமம்பெற்ற வங்கிகளுக்கும் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களுக்கும் முறையே வழங்கப்பட்ட 2022ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க சுற்றறிக்கை மற்றும் 2022ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க சுற்றறிக்கை என்பன ஊடாக ஆறு மாதங்களைக் கொண்ட காலப்பகுதியில் விடயத்திற்கு விடயம் என்ற அடிப்படையில் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் உள்ளடங்கலாக பொருளாதார துறைகளிலுமுள்ள அனைத்து பாதிக்கப்பட்ட கடன்பெறுநர்களுக்கும் பொருத்தமான சலுகைகளை வழங்குமாறு உரிமம்பெற்ற வங்கிகளையும் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களையும் இலங்கை மத்திய வங்கி கோரியிருந்தது. இதற்கிடையில், தேசிய பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்புச்செய்யும் வாய்ப்புடன்கூடிய வளம்பெறக்கூடிய வியாபாரங்களுக்கு புத்துயிரளிக்கும் நோக்குடன் உலகளாவிய நோய்த்தொற்றினால் பாதிக்கப்பட்ட குறைவாக செயலாற்றுகின்ற அத்துடன் செயலாற்றமற்ற கடன்பெறுநர்களை இனங்கண்டு உதவும் பொருட்டு **கொவிட்-19 இற்குப் பிந்திய புத்துயிரளித்தல் பிரிவுகளை** உருவாக்குமாறு இலங்கை மத்திய வங்கி நிதியியல் நிறுவனங்களைக் கோரியுள்ளது.

கடனை காலந்தாழ்த்திச் செலுத்தும் வசதியினதும் சலுகைகளினதும் வேறுபட்ட கட்டங்களின் போது நிதியியல் நிறுவனங்கள், சலுகைகளுக்கான 3.3 மில்லியன் கோரிக்கைகளுக்கு மேலதிகமாக அனுமதியளித்துள்ளன. 2022 இறுதியிலுள்ளவாறு இது மொத்தமாக ரூ.5,569 பில்லியன் ஆகும். (அட்டவணை 1).

**அட்டவணை 1: வேறுபட்ட கட்டங்களின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட கடனை காலந்தாழ்த்திச் செலுத்தும் வசதி மற்றும் சலுகைகள்**

| கடனை காலந்தாழ்த்திச் செலுத்துதலின் சலுகைகளின் கட்டம் | உரிமம்பெற்ற வங்கிகள் | | வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் | |
|---|---|---|---|---|
| | ஒப்புதலளிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை* | அங்கீகரிக்கப்பட்ட மொத்தப் பெறுமதி (ரூ. பில்.) * | ஒப்புதலளிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை* | அங்கீகரிக்கப்பட்ட மொத்தப் பெறுமதி (ரூ. பில்.) * |
| கட்டம் 1 | 1,344,728 | 2,473 | 814,336 | 313 |
| கட்டம் 2 | 127,491 | 941 | 99,912 | 60 |
| கட்டம் 3 | 177,160 | 921 | 492,734 | 168 |
| கட்டம் 4 | 150,077 | 723 | 54,386 | 38 |
| உரிமம்பெற்ற வங்கிகளுக்கான 2022ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க சுற்றறிக்கை மற்றும் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களுக்கான 2022ஆம் ஆண்டின் 01 இலக்க சுற்றறிக்கை என்பவற்றின் கீழான சலுகைகள் | 32,699 | 337 | 42,419 | 20 |
| **மொத்தம்** | **1,832,155** | **5,395** | **1,503,787** | **599** |

*ஒரே கடன்பெறுநர் வேறுபட்ட திட்டங்களின்/ கட்டங்களின் கீழ் சலுகைகளைப் பெற்றிருக்கலாம்.

சலுகைகளின் இறுதிக் கட்டம் நிறைவுபெற்றதைத் தொடர்ந்து அசாதாரண பேரண்டப் பொருளாதார நிலைமைகளுக்கு மத்தியில் கடன்களை மீளக்கொடுப்பனவு செய்வதன் மீதான சவால்களை முறியடிப்பதற்கு பல்வேறு பொருளாதாரத் துறைகளையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற கடன்பெறுநர்கள் மூலம் மேலதிக சலுகைகளுக்கான பல கோரிக்கைகளை 2023 சனவரியில் இலங்கை மத்திய வங்கிக்கும் அரசாங்க அதிகாரிகளுக்கும் முன்வைத்தனர். அதற்கமைய, **கடன்கள் மீள்கொடுப்பனவுகளைத் தொடங்குவதற்கு அவர்களது வியாபாரங்களை/ வருமான வழிகளை புத்துயிரளிப்பதற்கு வாய்ப்புடன்கூடிய** நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளையும் தனிப்பட்டவர்களையும் ஊக்குவிக்கின்ற அதேவேளை நிதியியல் துறை மீதான ஏதேனும் மிகையான அழுத்தத்தைத் தடுக்கின்ற நோக்குடன் பின்வருவன உள்ளடங்கலாக பாதிக்கப்பட்ட கடன்பெறுநர்களுக்கு பொருத்தமான சலுகைகளை வழங்குமாறு நிதியியல் நிறுவனங்கள் கோரப்பட்டுள்ளன.

அ. **கொடுகடன் வசதிகளுக்கான சலுகைகள்**: வியாபாரத்தின் எதிர்கால மீள்கொடுப்பனவு இயலளவு/ வளம்பெறும்தன்மை பற்றி நிதியியல் நிறுவனங்கள் மூலமான பொருண்மையான மதிப்பீடொன்றினைத் தொடர்ந்து, விடயத்திற்கு விடயம் என்ற அடிப்படையில் செயலாற்றுகின்ற அத்துடன் செயலாற்றமற்ற கொடுகடன் வசதிகளை மறுசீரமைத்தல்/ மீளஅட்டவணைப்படுத்தல்.

ஆ. **அறவீட்டு நடவடிக்கைகளை இடைநிறுத்தல்:** கடன்பெறுநர் ஏற்றுக்கொள்ளத்தக்க மீள்கொடுப்பனவுத் திட்டமொன்றினைச் சமர்ப்பிக்கின்ற நிபந்தனையின் மீது, எதிர்கால மீள்கொடுப்பனவு இயலளவு/ வளம்பெறும்தன்மை பற்றி நிதியியல் நிறுவனங்கள் மூலமான பொருண்மையான மதிப்பீடொன்றினைத்

தொடர்ந்து, விடயத்திற்கு விடயம் என்ற அடிப்படையில் 2020.01.01 அன்று அல்லது அதற்குப் பின்னர் செயலாற்றமற்றவையாக வகைப்படுத்தப்பட்ட கொடுகடன் வசதிகளுக்கெதிரான அறவீட்டு நடவடிக்கைகளை இடைநிறுத்தல்.

இ. **வசதிகளை முன்கூட்டியே தீர்ப்பனவு செய்தல்:** ஏதேனும் மேலதிகக் கட்டணத்தைச் செலுத்தாது தமது கொடுகடன் வசதிகளை முன்கூட்டியே தீர்ப்பனவுசெய்வதற்கு கடன்பெறுநர்கள் மூலம் மேற்கொள்ளப்படும் கோரிக்கைகளை உரிமம்பெற்ற வங்கிகள் பரிசீலனையில் கொள்ளல். குத்தகை வசதிகள் விடயத்தில் எதிர்கால வட்டியினை அறவிடுவது தள்ளுபடி செய்யப்படும். முன்கூட்டிய தீர்ப்பனவுக் கட்டணங்களுக்காக மற்றும் எதிர்கால வட்டி அறவீட்டிற்காக குறைக்கப்பட்ட வீதமொன்றினைப் பிரயோகிப்பதன் மூலம் ஏற்கனவே காணப்படுகின்ற செயலாற்றுகின்ற அல்லது மீளஅட்டவணைப்படுத்தப்பட்ட கொடுகடன் வசதிகளை முன்கூட்டியே தீர்ப்பனவுசெய்வதை வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் பரிசீலனையிற் கொள்ளல்.

நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கும் தனிப்பட்ட கடன்பெறுநர்களுக்கும் உரிய சலுகைகளை செயல்திறன்மிக்கவாறும் விரைவாகவும் நடைமுறைப்படுத்துவதை உறுதிசெய்வதற்கு அவற்றின் கிளை வலையமைப்பு முழுவதும் மேற்குறித்த தேவைப்படுத்தல்களை தொடர்பூட்டுமாறு இலங்கை மத்திய வங்கி உரிய நிதியியல் நிறுவனங்களைக் கோரியுள்ளது.

அதற்கமைய, தமது வருமானம் ஈட்டும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் அவர்களின் கடன் வசதிகளின் மீள்கொடுப்பனவை படிப்படியாகத் தொடங்குவதற்கும் தகைமையுடைய கடன்பெறுநர்களை வசதிப்படுத்தும் நோக்குடன் பொருத்தமான சலுகைகளை வழங்குமாறு நிதியியல் நிறுவனங்கள் கோரப்பட்டுள்ளன. மீள்கொடுப்பனவுத் திட்டங்களை கலந்துரையாடி இணக்கம் ஏற்படுத்துவதற்கு தொடர்புடைய தகவல்களுடனும் ஆவணங்களுடனும் உரிய நிதியியல் நிறுவனங்களைத் தொடர்புகொள்ளுமாறு தகைமையுடைய கடன்பெறுநர்கள் கோரப்பட்டுள்ளனர். கடன் கடப்பாடுகளை நீண்டகாலத்திற்கு மீளக்கொடுப்பனவு செய்யாமை நிதியியல் நிறுவனங்கள் மீதும் கடன்பெறுநர்கள் மீதும் வேண்டாத அழுத்தங்களை தோற்றுவிக்கும் என்பதால் நிதியியல் நிறுவனங்களுடன் இணங்கியவாறு மீள்கொடுப்பனவினைத் தொடங்குவதற்கு கடன்பெறுநர்கள் எதிர்பார்க்கப்படுகின்றனர்.